விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 30 மூஹர 10 இதழ் 217

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-9-1986

## இலங்கையில் வெளிநாட்டு வங்கிகள், நிறுவனங்கள் மூடப்படும் அபாயம்!

### —ரொனி தொடர்ந்து எச்சரிக்கை

கொழும்பு, ஞாயிறு "வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டுப் பூசல் நீக்குமானல் வெளிநாட்டு விமானச் சேவைநிறுவனங்கள் மட்டுமல்லாது, வர்த்தக நிறுவனங்கள், மற்றும் வெளிநாட்டு வங்கிகள் ஆகியனவும் இலங்கையிலிருந்து தமது நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ளும்" என்றுநிதியமைச்சர் திரு. ரொனிடிமெல் மீண்டும் எச்சரித்துள்ளார்.

பொதுநலவாய நிதியமைச்சர்களின் மகநாடு, மற்றும் சர்வதேசநாணய நிறுவனத்தின் வருடாந்த மகாநாட்டுக்குப் பயணமாகுமுன்னர் வழங்கியபேட்டியிலேயே அமைச்சர் டிமெல் மேற்கண்டவாறுகுறிப்

(4ம் பக்கம் பார்க்க)

## ● படுவான்கரையில் 5வது நாளாக

# 359 குடும்பங்கள் பரிதவிப்பு

# மட்டு. ஆயர் உதவி நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான்கரையில் ஆயுதப்படையினர் முகாமிட்டுள்ளதால் 359 குடும்பங்கள் அகதிகளாகியுள்ளனர். கடந்த 5 நாட்களாக இவர்கள் உணவின்றித் தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது மட்டக்களப்பு கத்தோலிக்க ஆயர் அதி வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இந்த அகதி மக்களுக்கு உணவுப்பண்டங்களை அனுப்பிவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

படுவான் கரையிலுள்ள குறிஞ்சாமுனை, தாளம்பக் கேணி, மங்கிக்கட்டு. தூண்டி, வவுணதீவு ஆகிய ஐந்து கிராமங்களிலும் வசித்த மக்களே அகதிகளாகி ஈச்சந்தீவு, விலா வெட்டுவான் கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

படுவான்கரையிலுள்ள பல வீடுகளில் ஆயுதப்படையினர் முகாமிட்டுள்ள போதிலும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடமுடியாதவாறு போராளிகள் அவர்களைச் சுற்றிவளைத்து 'சென்ரி' போட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. இருந்த போதிலும் கடந்த 5 நாட்களாக இப்பகுதியில் குண்டுகளும் துப்பாக்கி சூட்டுசத்தங்களும் வெடிக்கும் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமிருந்தன.

ஆயுதப்படையினரின் இந்த நடவடிக்கையால் மேற்குறிப்

(4-ம் பக்கம் பார்க்க

## 'டோர்ச் லைட்' குண்டு: இருவர் மரணம்

வவனியா, திங்கள் அநுராதபுரம் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற இரு டோச்லைட் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் மருதங்கடவல என்னுமிடத்தில் வீதியில்கிடந்த டோச்லைட் ஒன்றை எடுத்த சிறுவன் ஒருவன் அதைத் தனது வீட்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் திடீர் தேடுதல்: 100 பேர்வரை தடுத்துவைப்பு

[திருமலை நிருபர்]

திருமலை நகரிலுள்ள சிவன் கோவிலடி, செல்வநாயகபுரம் அன்புவழிபுரம் ஆகிய பகுதிகளில் ஆயுதப்படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்களில் 100 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த சில நாட்களாக திருமலைப் பகுதியில் ஆயுதப்படை

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ செம்படை உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், திங்கள் அநுராதபுரத்தில் இடம் பெற்ற "டோர்ச்லைட்" குண்டுத்தாக்குதல்க்கு உரிமை கோரி 'தமிழீழ செம்படை' இயக்கம் அறிக்கை ஒன்றை நேற்றுமாலைவிடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

நேற்று எமது செம்படைக் கெரிலாக்களினாலேயே 'டோர்ச்' குண்டுத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இவை எம்மால் திட்டமிட்டு நவீன முறையில் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

"எமது தமிழீழ மக்களை கொடூரமான முறையில் திட்டமிட்டு அழித்து வரும் சிறீலங்கா அரசுக்குப் பதிலடி கொடுக்குமுகமாகவும் சிறீலங்கா பயங்கரவாதத்துக்கு ஆதரவாக அமையும் சிறீலங்காபொருளாதாரத்தை நிர்மூலமாக்கவுமே எம்மால் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன." (மா)

## மன்னார் சிங்கள மகாவித்தியாலய கட்டடம் தகர்ப்பு

மன்னார், திங்கள்

மன்னார் - தலைமன்னார்வீதியிலுள்ள சிங்கள மகாவித்தியாலயத்தின் கட்டடங்கள் நேற்றிரவு இனந்தெரியாதோரினால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன.

இப்பாடசாலையின் 3 கட்டிடங்களில் இரண்டு இக்குண்டுகளினால் முற்றாகத் தகர்ந்துள்ளன. [வவ-நிரு-ஊ]

## கிழக்கில் 3000 இளைஞர்கள் படையினரால் கைது - கூட்டணி அறிக்கை

சென்னை ஞாயிறு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் 3 000 த்துக்குமதிகமான தமிழ இளைஞர்களை ஆயுதப்படையினர் கைது செய்து காவலில் வைத்துள்ளனர் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட்பீரோ குற்றம் சுமத்தியுள்ளது.

சென்னையில் வைத்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே கூட்டணி இக்குற்றச்சாட்டினைச் சுமத்தியுள்ளது

கிழக்கில் பாதுகாப்புப் படையினர் தமிழரைக் கண்டபடி கொன்றுவருகிறார்களென்றும், பலரைக் கைதுசெய்து சித்திரவதை செய்வதாகவும் இவ் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது

தமிழ்ப் பகுதிகளிலிருந்து ஆயுதப்படையினர் வாபஸ் பெறப்படவேண்டுமெனவும் கூட்டணி கோரியுள்ளது.

## இன்று மங்களகரமான திறப்பு விழா



BERUWELA PHARMACY

இன்று 15-09 86 பகல் 12-30 — 2-26ல் உள்ள சுபவேளையில் எமது பார்மசி ஆரம்பித்து நடாத்தவிருப்பதால் சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

உரிமையாளர்கள்.

பேருவல பார்மசி

151, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

பார்மசி தொழிலில் பல வருட அனுபவம் பெற்றவர்கள்.

C 4644

## மட்டு. பொலிஸ் நிலையம்மீது மோட்டார் தாக்குதல்!

யாழ்ப்பாணம், திங்கள் மட்டக்களப்பு பொலிஸ்நிலையம் மீது 'மக்கள் விடுதலைப் படை'யினர் கடுமையான மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதில் பலர் கொல்லப்பட்டும் காயமுற்றுமுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகரமுன்னணி அறிவித்துள்ளது

இத்தாக்குதல்சம்பவம் குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"நேற்றுமுன்தினம்நள்ளிரவு 12 மணியளவில் இடம் பெற்ற தாக்குதலின் போது பொலிஸ் விடுதியொன்றும் முற்றாகச் சேதமாக்கப்பட்டது.

"மட்டக்களப்பு படுவான் கரை, கொக்கட்டிச் சோலை, கன்னன்குடா போன்ற பகுதிகளை இராணுவத்தினர் சுற்றிவளைக்கும் நடவடிக்கையைத்

(4ம் பக்கம் பார்க்க)

## கட்டுப் பெத்தைக்கு ஒரேயொரு தமிழ் மாணவி

யாழ்ப்பாணம், திங் கட்டுப்பெத்தைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கட்கான அனுமதி வெகுவாகக் குறைந்து வருகின்றது.

[4ம் பக்கம் பார்க்க]

## ஹமீத், லலித், காமினி இந்தியா செல்வர்?

கொழும்பு, ஞாயிறு புதுடில்லியில் இடம்பெறவிருக்கும் இனப்பிரச்னை தொடர்பாக மூன்றும்கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ ஸி. எஸ் ஹமீத், தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு.காமினி திஸநாயக்காவுக்கு ஆகியோரை இந்தியா அனுப்பி வைப்பதற்கு ஜனாதிபதி ஜயவர்த்தன ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி 3ம் ஒழுங்கை வீதி அருகாமையில் 2 பரப்புக் காணி, புதிதாகமறுசீர் அமைக்கப்பட்ட உழவு இயந்திர இணைப்புப்பெட்டி ஒன்று விற்பனைக்குஉண்டு. தொடர்பு: 32/1, சீனி வாசகம் வீதி, கொட்டடி. (C-4602)

---

சித்த ஆயுர்வேத வைத்திய சாலையில் மருந்து தயாரிப்பு வேலைகட்கு பெண் பிள்ளைகள் தேவை. நற்சான்றிதழுடன் நேரில் தொடர்புகொள்ளவும்: மங்களபதி வைத்திய சாலை, 41/5 சங்கிலியன் வீதி (பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி), நல்லூர். C 4628

---

வீட்டுத்தளபாடங்கள், கசற்டெக்செற், Sanyo speakers, Bread Toaster, தட்டச்சு யந்திரம் கிளாஸ் Show case, ஹோல் செற், சிங்கர் Zig Zag தையல் மெஷின், வயலின், லேடிஸ் சைக்கிள், Stabilizer, Vono spring twin beds, Foam மெத்தைகள், லிபிகிளாஸ் வகைகள், மற்றும் பல உடன்விற்பனைக்கு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். St Charles பாடசாலையருகில். (C-4619)

---

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் முன்பாக உள்ள எமது விளம்பர நிலையத்தில் இருந்து அண்ணா கோப்பி, மற்றும் அண்ணாவின் உற்பத்தி பொருள்களை வாங்குவதோடு இனும் பொருள்களையும், பெறுமதி வாய்ந்த துர்க்கையம்மன் ஸ்ரிக்கரையும் இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். (A-1270)

---

காங்கேசன்துறைகலூரில் வீதி இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள நான்கு பக்கமும் சுற்று மதிலும், கிணறும், வளர் பயிர்களுடனும் கூடியஇரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஐ. தர்மலிங்கம், ஆலயவீதி, காங்கேசன்துறை C 4633

---

மைசூர் அரிசி நம்பர்-1 கசிவில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

---

வெளிநாடு செல்லும் டாக்டர் ஒருவரின் பலவித வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அல்மாரிகள், Show case, கண்ணாடி, மேசைகள், Ladiesசைக்கிள், சாப்பாட்டுமேசைகள், ஹோல் செற்றிகள், Typewriter, Fan Glass Book self, கசற் றேடியோ, அயன், கிளாஸ் வகைகள், சிங்கர் தையல் மெஷின், கட்டில் மெத்தைகள், Vono Spring கட்டில்கள், குளிர்சாதனப்பெட்டி மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். St. Charles பாடசாலையருகில். [C 4587]

## விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்களும் மீன் உணவும் விற்பனைக்கு உண்டு. கருவேலடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, (பழைய புகையிரத வீதி) C 4643

---

நல்ல இன பசுமாடு கன்றுடன் விற்பனைக்கு உண்டு அன்று ஈன்று 42 நாட்கள். 18 போத்தல் பால் கறக்கக் கூடியது. N. சிவகுகன், 51, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். C 4631

---

பெரிய அளவிலான செப்பு, பித்தளை, அலுமினிய கிடாரம், டபாரா சட்டி, வெங்கல அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, மெழுகுவர்த்தி ஸ்டாண்ட், ஸ்தூபி, வேல், சூலம், கும்பசெம்பு மற்றும் எவர்சில்வர் அன்பளிப்புப்பாவனைப்பொருட்களும்மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: ஸம்ஸ், 26/B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், கிளை: 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4635

## தேவை

யாழ்ப்பாணத்தில் நல்ல முறையில் இயங்கும் டிஸ்பென்சரியைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய Doctor (M B B.S. or R. M P) தேவை. விண்ணப்பங்கள் 21ம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பவும் விளம்பர இல. C 4625 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4625

---

இறைச்சிக்கு கோழி தேவை கிலோ 35 ரூபாவிற்கு மேற்பட்ட பல விலைகளில் எவ்வகை இனமாயினும் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல, 23131 [C-4565]

---

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரரில் க. பொ. த. [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [C-4412]

## தவறிவிட்டது

முனசிங்க ஆராச்சிகே சந்திரதாசா என்பவருக்குச் சொந்தமான அடையாள அட்டையும் [இல. 810451090] இவரின் சாரதி அனுமதிப் புத்தகமும் [இல. DL 44150] 29 8-86 அன்று யாழ். மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பி. நவரத்தினராசா, 170, நெடுங்குளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். C4639

## சேவை

வெளிநாட்டு, உள்நாட்டு குளிர்சாதனப்பெட்டிகள் அநுபவம் மிக்க தொழில்நுட்ப வல்லுநரால் சிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும். ஒருவருட உத்தரவாதமும் அளிக்கப்படும். பிறீமல்றி சேவிஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. [திருநெல்வேலிச் சந்திக்கும் யாழ். மருத்துவபீடத்திற்கும் இடையில்] [C4582]

## கல்வி

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு ஏழுக்கு 1987 இல் அனுமதி கோர விண்ணப்ப முடிவு 22-09-1986 பிரவேசப் பரீட்சை 25-10-1986இல் நடைபெறும். கடந்த ஆறுண்டுப் பரீட்சைகளின் 12 வினாத் தாள்களும், 30 தமிழ்க் கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12-50. உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. C 4627

## வகுப்புகள்

ஆரம்பம் 6-10 86 A/L 87 பகல்நேர தூய/பிரயோக கணிதம் ஆசிரியர் பிரேம்நாத் Time: 9-00 a.m. 3-ம் குறுக் தெரு, யாழ்ப்பாணம். (P. M. C. முன்பாக) C 4605

---

ஆரம்பம் 16-9-86 A/L 87 பௌதிக தூய மீட்டல் ஆசிரியர் ரவிந்திரநாதன் Time Tue and Thurs 4-00 p.m 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [P.M.C முன்பாக [C 4604]

---

6ம், 7ம், 8ம் வகுப்புகள் கணிதம் ஆங்கிலம் G C. E O' Lev. கணிதம் G C. E. 'A' Lev. Pure Maths App Maths Physics 12 வருட கணித, தமிழ் ஆங்கில அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். வீடுகள் தோறும் சென்று கற்பிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும், விபரங்களுக்கு விளம்பர இல C. 4609 C/o ஈழநாடு என்னும் முகவரிக்கு உடனே விண்ணப்பிக்கவும். (C 4609)

---

**A/L 87**
**DAY PAPER CLASS**
ஆரம்பம்: 15–9–86
திங்கள் - 6-15—8-15
தூய / பிரயோக } கணிதம்
A. பத்மநாதன்
**Niru Tuition Centre, Kondavil**
(A 1325)

---

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு
**கொழும்பு ஸ்ருடியோ**
(A 1041)

---

**COMSAT COMMUNICATIONS**
INTERNATIONAL TELEPHONE - TELEX SERVICE
**கொம்சட் கொமினிகேஷன்**
உள்நாட்டு - வெளிநாட்டு தொலைபேசி சேவை
இல: 791/1, பருத்தித்துறை வீதி, (மேல்மாடி கட்டடம்)
கல்வியங்காடு, — யாழ்ப்பாணம்.
இரவு பகல் 24 மணிநேர சேவை
(டாக்டர் G. குமரேந்திரன் மெடிக்கல் கிளினிக் அருகாமையில்) (C-4637)

---

## தேவை

"DIPLOMA IN HOME ECONOMICS" பயிலும் மாணவருக்கு ஆசிரியர் உடன் தேவை B Sc. அல்லது மனையியல் புலமையுடன் அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம்:-

அதிபர்,
**வர்த்தகக் கல்லூரி,**
(INSTITUTE OF COMMERCE)
அகஸ்தியர் ஒழுங்கை, இளவாலை.
[C-4638]

---

## பணிவான வேண்டுகோள்

அராலி தெற்கு, கற்குளி வீதியில் புதன்கிழமை [10-9-86] மாலை 7-30அளவில் சுன்னாகத்தில் இருந்து வேலைமுடிந்து வீடுதிரும்பும் வழியில் இனந்தெரியாத இளைஞர்களினால் துப்பாக்கிமுனையில் எனது 85 ஸ்ரீ 07 CG 125 சிவப்புநிற HONDA மோட்டார் சைக்கிளை ஒருநாளில் திருப்பித்தருவதாக கடத்திச் சென்றுள்ளனர். இன்றுவரை கிடைக்கவில்லை. இதனால் எனது அன்றாட அலுவல்களைச் செய்வதற்கு சிரமப்படுகிறேன். எனவே நல்லெண்ணமுள்ள புனித இயக்கங்கள் இதில் தலையிட்டு மீட்டுத்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பா. சுதர்சன்.
அராலி தெற்கு, அராலி. [C-4629]

---

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு கிழமையும் கொழும்பிலிருந்து நேரடியாகப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகள் ★

வருமான ஒழுங்குகளுடன் அழைத்துச் செல்லப்படும்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

**UNIVERSAL AGENCIES**
**யூனிவேர்சல் ஏஜென்ஸி**
125 [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
[A 1324]

---

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ ஜேர்மனி ★ சுவிஸ்

ஆகிய நாடுகளிற்கு இங்கிருந்து 23ம் திகதி அழைத்துச் செல்ல உள்ளார்.
உடன் கடவுச்சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும்

பாஸ்போட், பொண்டிங், ரிக்கற்றிங், விசா, என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**லிப்ருஸ் லிமிற்ரெட்**
R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[A-1329]

### மணிவாக்கு

மேதைகள் பெரிய விடயங்களை ஆரம்பித்துவிடுவார்கள். உழைப்பாளிதான் அதனை முடித்துவைப்பான்.

—ஜோபேர்ட்

# இலங்கையில் அதிகரித்து வரும் தமிழர் மறைவுகள்

['அம்னெஸ்ட்டி இன்ரர் நேஷனல்' அறிக்கையின் இன்னொரு பகுதி இங்குதரப்படுகின்றது ]

"காணாமல்போன" பலர், காவலில் வைக்கப்பட்டிருக்கையில் இரகசியமாகச்சுடப்பட்டு அவர்களின் சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இது போன்ற கொலைகளைப்பார்த்த சாட்சியங்கள் பெரும்பாலும் இருக்க முடியாதாகையால் இவற்றை உறுதிப்படுத்தமுடியாது. ஆயினும் இத்தகைய இரு சம்பவங்களில், இரண்டும் பாரிய எண்ணிக்கையிலான கொலைகளுடன் சம்பந்தப்பட்டவை; பாதுகாப்புப் படையினரால் கூட்டிச்செல்லப்பட்டோர் இரகசியமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது பற்றியபுகார்கள் விபரமான முறையில் தொடுக்கப்பட்டுள்ளன.

## ஈரற்பெரிய குளத்தில் 84 டிச. 2ம் திகதி

'அம்னெஸ்ரி இன்டர் நேஷனல்' ஸ்தாபனத்துக்கு அண்மையில் கிடைத்த முன்னாள் கைதி ஒருவரின் சத்தியக்கடதாசியில் தான் ஈரற்பெரிய குளம்ராணுவமுகாமில்தடுத்து வைக்கப பட்டிருக்கையில், சுமார் 100 தமிழர் காவலில் வைக்கப்பட்டிருந்ததையும், பின்னர் துப்பாக்கி வேட்டுக்கள் 100 வரை தீர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

## ஈரற்பெரிய குளம், தம்பிலுவில் பகுதிகளில் 100க்குமேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு சுடப்பட்டனர்

"டிசம்பர் 2ம் திகதி நானும் இன்னொரு கைதியும் முகாமின் அலுவலகத்துக்கு அழைக்கப்படடோம. நான் செல்லும் வழியில் சுமார் 100பேர் சாரம் உடுத்த நிலையில் ஒருமரத்தின் கீழே இருத்திவைக்கப்பட்டிருப்பதையும அவர்களை ராணுவத்தினர் காவல் காத்துக்கொண்டிருப்பதையும் கண்டேன். ஆயினும் அலுவலகத்தினுள் இந்த 100 பேரும் இருந்த திசைக்கு எதிர்த்திசையில நானும் இன்னும் சிலரும் இருத்திவைக்கபபட்டோம்.

"...2-15 மணியளவில் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்க ஆரம்பித்தன. ஒவ்வொரு தரமும் ஐவைந்து வேட்டுக்கள் கேட்டன சுமார் 20 தடவைகள் இவ்வாறு நடந்தது. சுமார் 4 மணியளவில என்னையும். இன்னொரு வரையும் திரும்பி முகாமின் முன்புறம் பார்க்கும்படி ஒரு ராணுவத்தினர் கூறினார். ...திரும்பிப் பார்த்த போது அங்கு தீ சுவாலைவிட்டு எரிவதையும் அதிலிருந்துகரும் புகை எழுவதையும கண்டேன்.

"...அடுத்த நாள் மேஜர்... எங்களது அறை (Cell) அருகே வந்து. அடுத்தஅறையிலிருந்து இருவரை அழைத்துச் செல்லுமாறு கூறினர். அங்கிருந்த ஒரு கைதி இராணுவத்தினர் ஒருவரால் கூட்டிச் செல்லப்படுவதைக்கண்டேன். சிறிது நேரத்தில் துப்பாக்கிவேட்டுச் சத்தமொன்று கேட்டது. 5 நிமிடங்களின் பின்னர் அதே ராணுவத்தினர் வந்து இன்னொரு கைதியும், பின்னர் வேறு இருவரையும் கூட்டிச்சென்றார்...

"...நானும் இன்னொருவரும் மேற்கூறிய மேஜரைகும்பிட்டபடி நின்றோம். அதன் பின்னர் அவர்போய்விட்டார். போகையில் அடுதத அறையிலிருந்த கைதி ஒருவரிடம். 'கவலைப்படவேண்டாம், நாங்கள் புலிகளை மட்டும் தான் சுடுவோம்' என்று கூறினர்.

"...அன்றிரவு எமது அறைக்கு வந்த ஒரு சார்ஜன்ட் எம்மை நோக்கி. "நீங்கள் உயிர் தப்பிவிட்டீர்கள் என நினைக்கவேண்டாம் நீங்களும் ஏனைய 119 பேரைப்போல் போய்விடுவீர்கள் என்றார் ..."

84ம் ஆண்டு டிச. 2ம் திகதியன்று வவனியாவில் ராணுவ, விமானப்படையினரால் கைது செய்யப்பட்டு, ஆனால் பின்னர் 'காணமல்போன' சுமார் 100 பேர் என்னவானார்கள் என்பதை மேற்கூறிய சாட்சியம் தெளிவுபடுத்தும் என 'அம்னெஸ்ரி இன்டர் நெஷனல்' நினைக்கிறது. இக்கைதுகளில் பெரும்பாலானவை சேமமடு, செட்டிகுளம் பகுதிகளில் நடந்தவை (இத்தொகுப்பின் ஆரம்பத்தில் நாம் கூறிய மறைவுகளும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவையே). இச்சம்பவம் கென்ட், டொலர் பண்ணைகளில் 65 சிங்களக் குடிமக்கள் (பெரும்பாலானோர் முன்னாள் கைதிகளும், குடும்பத்தவரும்) கொலைசெய்யப்பட்டு இருநாட்களில் நடந்தன. இவர்களின் கைதுபற்றி அரசு மறுத்துள்ளது.

டிசம்பர் 1ம், 2ம் திகதிகளில் தேடுதல் வேட்டை நடத்திய பாதுகாப்புப் படையினரால் பல பொதுமக்கள் கண்டபடி சுட்டுக்கொல்லப்பட்டது பற்றியும் அம்னெஸ்ரி இன்டர்நேஷனல் அறிக்கைகள் கிடைத்துள்ளன. ஒதியமலைக்கு அண்மையிலுள்ள கிராமமொன்றில் 27 கிராமத்தவர் சுடப்பட்டனர்!

சேமமடு, செட்டிகுளம் பகுதிகளில் டிசம்பர்2இல் கைதான 92 பேரின் பெயர் விபரம் அம்னெஸ்ரி இன்டர் நேஷனலிடம் உண்டு. இதுவரைக்கும் இவர்களின் கைது குறித்து படை அதிகாரிகள் மறுத்து வந்தாலும், காணமல்போனோரின் உறவினரிடம அரச அதிபர், அவர்கள் உயிருடன் இன்னமும் இருப்பார்களா எனத் தான் சந்தேகப்படுவதாக கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தம்பிலுவில் 85 மே 17

85 மே இறுதியில் பல சர்வதேச செய்தி ஸ்தாபனங்களின் அறிக்கையின்படி, நற்பிட்டிமுனை, துறைநீலாவணை, சேனைக்குடியிருப்புப் பகுதிகளிலிருந்து விசேட அதிரடிப் படையினரால் மே 16-18ம் திகதிகளுக்கிடையில் 60-63க்குமிடைப்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டு சுடப்பட்டனர். இவர்களில் சுமார் 40 பேர் அனேகர் 18-25 வயதுக்குட்பட்டோர், தம்பிலுவில் மயானத்துக்கருகிலுள்ள இடமொன்றுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு தத் தமது புதைகுழிகளை வெட்டச் சொல்லி பின்னர் சுடப்பட்டனர். இவர்களின் சடலங்கள் பின்னர் இச்சம்பவத்துக்குப் பொறுப்பான அதிரடிப் படையினரால் தோண்டி எடுக்கப்பட்டு மட்டக்களப்பில் எங்கோ ரகசியமாகப் புதைக்கப்பட்டது.

தொகுப்பு: செந்தில்

## வெளிநாட்டு நிருபர் அறிக்கை

இச்சம்பவம் நடந்து ஒரு கிழமைக்குப் பின்னர் அங்கு சென்ற லண்டன் 'டெய்லி ரெலிகிராப்' பத்திரிகை நிருபர் அனுப்பிய அறிக்கை ஒன்றில், 'அங்கு காணப்பட்ட 3 வெவ்வேறு புதிதாகத் தோண்டப்பட்ட மண்களைக் கொண்ட தொகுதிகளிலிருந்தும், அங்கே இடைக்கிடை சிதறியிருந்த மனித தலைமயிரிலிருந்தும்" அவ்விடத்தைத் தான் அடையாளம் காணக் கூடியதாக இருந்தது எனக் கூறியுள்ளார்

## நற்பிட்டிமுனையில்...

சம்பவதினம் அதிகாலை இக்கிராமத்துக்கு விஜயம் செய்த அதிரடிப் படையினர் அங்கு பல இளைஞரைக் கூட்டிச் சென்றனர் சில உறவினருக்கு கொண்டு செல்லப்படுவோரின் பெயர் பட்டியலில் இல்லாவிடின் அதே தினமே விடுதலை செய்யப்படுவர் எனக் கூறப்பட்டது. ஆயினும் கொண்டு செல்லப்பட்டோர் அதன் பின்னர் காணப்படவில்லை. இச் சம்பவத்தினைப் பற்றி பாதிக்கப்பட்ட ஒருவரின் வாக்குமூலம்.

"...சுமார் 5.30 மணியளவில் கமாண்டோக்கள் 8 ஜீப்புக்களில் வருவதைக் கண்டன் ஒரு ஜீப்பிலிருந்து கீழே குதித்த இரு கமாண்டோக்கள் எனது வீட்டின் முன்னாலிருந்து எனது மகன் முரளிதரனைக் கொண்டு சென்றனர் "

"...பின்னர் 2-3 கமாண்டோக்கள் வீட்டின் ஒவ்வொரு அறையாகச் சென்று தேடுதல் நடத்தினர். அங்கு நித்திரையிலிருந்த எனது மகனை பிடித்திழுத்து ஜீப்பினுள் ஏற்றினா..."

(5ம் பக்கம் பார்க்க)

## நமது நோக்கு

# உணவுப் பொருள்களில் கதிரியக்கப்படிவம்?

வயிற்றோட்ட நோய் தென்பகுதியில் குறிப்பாக குருநாகல், சிலாபம், குளியாப்பிட்டிய பகுதியில் பரவி பல உயிர்களைப் பதம் பார்த்துள்ளது. விரைவாகப் பரவக்கூடிய இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரஅதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அதே வேளையில் வேறு சில பகுதிகளுக்கும் அது கட்டுப்பாட்டை மீறி ஊடுருவப் பார்க்கின்றது

இருந்தபோதிலும் குறிப்பிட்ட பகுதிகளிலேயே இந்த வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்திவிடுவதில் சுகாதாரஅதிகாரிகள் மிகுந்த பிரயாசையுடன் செயல்பட்டுவருகிறார்கள். இன்னமும் குருநாகல் ஆஸ்பத்திரியில் வயிற்றோட்ட நோயாளர்கள் இருந்து வருகிறார்களாம்.

நமக்குள்ள கவலை என்னவென்றால் இந்தப்பொல்லாதவயிற்றோட்டம் இன்று தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் தடைமுகாம்களையும் மீறிக் கொண்டு இப்பிரதேசத்துக்குள்ளும் புகுந்துவிடக் கூடாதென்பதே!

கடந்த பல வாரங்களாக கடும்வெயிலும், உஷ்ணமும் இப்பிரதேசத்தை மிக மோசமாக வாட்டிவருகின்றன. இந்த நிலையில் வயிற்றோட்டம் போன்ற வெப்ப நோய்கள் இலகுவாகப் பரவிவிடக்கூடும். எனவே இது விடயத்தில் அதிகாரிகளும், பொதுமக்களும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்வது அவசியம்.

உணவுப் பொருட்கள், குடிநீர் போன்றவற்றை சுத்தமாக வைத்துக்கொள்வதும், உணவு விடுதிகளில் ஆகாரவகைகளைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் பொதுமக்கள் கூடும் இடங்களை அசுத்தமாக்காது பார்த்துக்கொள்வதும் அவசியம்.

அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயுதம் கடத்தப்படடு தென்இந்தியாவுக்கு கொண்டு வரபபட்டுவிட்டதாகவும், அங்கிருந்து தமிழ்த் தீவிரவாதிகளால் இலங்கைக்கு கொண்டுவரப்படலாம் என்றும் தென்னிலங்கை பத்திரிகைகள் பெரிதாகக் கவலைவெளியிடுகின்றன. அரசுக்கும இந்த விடயம் பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கின்றது.

தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதம கிடைக்கக்கூடாதென்பதில் காட்டப்படும் அவசரமும் அங்கலாய்ப்பும் இப்பிரதேசத்தில் நோய்கள் பரவாமலிருக்க வேண்டும் என்டதிலும் காட்டப்படுமா என்பது சந்தேகமே.

நோய்களைத் தடுக்கும் ஆஸ்பத்திரி டாக்டர்கள் தங்கும் விடுதிகள் மீதே 'ஷெல்' வீசித்தாக்கப்படும் விசித்திரம் இங்குதானே நடக்கிறது: நோயாளிகளின் உயிர்களைக் காப்பாற்றவே டிய டாக்டர்களும் மற்றைய ஊழியர்களும் தமது உயிர்களை முதலில் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு தெருவில் இறங்கி அரசாங்க அதிபரின் காரியாலயத்துக்கு ஊர்வலம் செல்லும் காலம் இது.

இவ்வாறு நாம் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் அணு கதிர் பாதிப்பு இந்த நாடடிலும் ஏற்பட வாய்ப்பு இருப்பதான ஒரு தகவலும் வந்துள்ளது.

சோவியத் செர்னோபில் அணு உலையில் ஏற்பட்ட கதிரியக்க கசிவுகள் சுற்றுவட்டார நாடுகளையும் பாதத்திருக்குமென்பதால் அந்த நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் உணவுப் பொருள்களில் கதிர் படிவுகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இதன்படி ஏற்கனவே இங்கு கொண்டு வரப்பட்ட இரு கப்பல்கள் நிறைந்த பால் உணவுகளை சுங்கப்பகுதியினர் தடுத்துள்ளனர். அதே சமயம் இரண்டு விதமான 'ஜாம்' ரகங்கள் பற்றி சுகாதார அமைச்சு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துளளது

இறக்குமதி செய்யப்படும் சகல விதமான உணவுப் பொருள்களும் அடுத்த ஆறு மாதகாலத்துக்காவது பரிசோதனைக்குட் படுத்திய பின்பே பாவனைக்கு விடப் பட வேண்டும் என அணு சக்தி அதிகார சபைத் தலைவர் டாக்டர் கிரான்வில் தர்மவர்த்தன கூறியிருக்கிறார்.

இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருள்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமையால் அவைகளை பெருமளவில் இறக்குமதி செய்துள்ள தனியாரும், கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்களும் கலக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

டாக்டர் தர்மவர்தன கூறியிருப்பதுபோல் இப்பொருட்களை முறையாக பரிசோதித்த பின்னரே பாவனைக்குவிட வேண்டும். தற்செயலாகவேனும் கதிரியக்கப்படிவங்கள் காணப்படும் பட்சத்தில் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க இது உதவும். பரிசோதனைக்குட்படுத்தாமலே வெளிநாட்டுப் பொருள் என்பதற்காக உணவுப் பொருட்களைத்தடைசெய்ய முயல்வது மடமை.

இப்போது சந்தேகத்துக்குள்ளாகியுள்ள உணவுப் பொருட்களை குறைந்த விலையில் சந்தைகளில் தள்ளிவிட பொறுப்பற்றவர்கள் முயற்சி செய்யக் கூடும். அவ்வாறானபொருள்கள் தமிழ்ப்பகுதிகளுக்குள் இலகுவாக நுழைக்கப்படாமல் இருப்பதை பொது நிறுவனங்கள் கவனிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

## அறிஞர் அண்ணா

எரிமலைபோல் வெடித்திட்ட வேழம்
எம்தமிழர் விடிவிற்கோர் நாதம்
சரிநிகர்த்த அறிவிலுயர் ஆழம்
தவப்பயனாய் எம்மிடையே வாழும்.

அடுக்குத் தொடர் தொடுத்து
அன்பை அறிந்தறிந்து ஊட்டும்
மிடுக்கு மிகச் சிறிதுமின்றி
மென்மை இழைய ஒலிகூட்டும்.

வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு
விண்ணதிர விதயமைத்துக் கூவும்
மாற்றாரும் மனமகிழ்ந்து போற்ற
மதுவலியை மாகின்றிக காட்டும்.

கலையோடு கல்வியையும் விண்டு
கருத்தாழம் கவிநயங்கள் கொண்டு
அலைபாயும் அறிவொளிக் கீற்றை
அற்புதமாய் அவனியெங்கும் பாச்சும்,

— ஐயா யோசப்.

# ஹாட்லி நூலக தீவைப்பினால் எதிர்காலச் சந்ததி பாதிப்பு!

## — அதிபர் கவலை

[பருத்தித்துறை]

''மனிதன் பூரண அறிவைப் பெற்று வாழ்க்கையில் வெற்றி பெற நூல் நிலையங்கள் சிறந்த பொக்கிஷங்களாகத் திகழ்கின்கின்றன. ஹாட்லிக் கல்லூரியில் அமைந்திருந்த நூல் நிலையம் தீக்கிரையானது எமது எதிர்காலச் சந்ததியினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது இதனால் ஹாட்லிக் கல்லூரி தாயை இழந்த சேய் போல் தவித்து நிற்கின்றது''.

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் நூல் நிலையம் தீக்கிரையாக்கப் பட்ட இரண்டாம் ஆண்டை நினைவுகூரும் முகமாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களால் நடாத்தப் பட்ட கூட்டத்தில் உரையாற்றிய கல்லூரிஅதிபர் திரு. பீ. பாலசிங்கம் குறிப்பிட்டார். கூட்ட ஆரம்பத்தில் இரண்டு நிமிட மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது தொடர்ந்து உரையாற்றிய அதிபர் திரு பாலசிங்கம் குறிப்பிட்டதாவது:

கல்லூரி நூல்நிலையம் தீக்கிரையாக்கப்பட்டபோது தங்கள் உயிரைக் கூடத் துச்சமெனமதித்து சில முக்கிய நூல்களை காப்பாற்றித்தந்த கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர் திரு. விஜயரத்தினத்திற்கும் முன்னாள் அதிபர் திரு. டபிள்யூ. என்.எஸ். சாமுவேலிற்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டியது மிக முக்கியமாகும். மேலும் எமது நூல் நிலையத்திற்குப் பெறுமதிமிக்க நூல்களை அன்பளிப்புச் செய்த பெரியார்களையும் நாம் மறந்துவிடமுடியாது. இந்நூல் நிலையம் மேலும் வளர்ச்சியடைய பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் உதவிகளை வழங்க வேண்டும்.

சிரேஷ்ட ஆசிரியர் திரு. ஆர். கார்த்திகேசுவும் உரையாற்றினார்.

நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

திருமதி
சோமசுந்தரம்
சோமாவதி

அசஷ வருடம் ஆவணி மாதம் 1ம் திகதி (17-08-1986) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சோமசுந்தரம் சோமாவதி அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எங்களது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் (16-9-86) செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி
இங்ஙனம்
கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

No:46, மணல்தரைலேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[C-4648]

லிடோ
16ம் திகதி முதல்
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30
பிரபு, நளினி
நடித்த,
நியாயம்
(கலர், புதிய வெளியீடு)

வெலிங்டன்
10-30 2-30, 6-30
தியாகராஜன்
சில்க் சுமிதா
ஜெய்சங்கர்—பானுசந்தர்
நடித்த
நீங்கள் கேட்டவை
(கலர்) புதிய பிரதி

## சுன்னாகத்தில் இரவுச்சந்தை

யாழ்ப்பாணம், திங்

சுன்னாகம் சந்தை செவ்வாய் சனிக்கிழமைகளில் இரவு நேரச் சந்தையாகவும் இயங்கவிருக்கிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவுச் சந்தையை நடத்துவதற்கான ஆரம்பவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இரவுச்சந்தைமூலம் விவசாயிகளும், பாவனையாளர்களும் நன்மையடைவர் எனத் தெரிகிறது.

வழமைபோல் சுன்னாகத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களிலும் பகல்சந்தை நடைபெறும்.

## ஆவணி வேல்விழா சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஆவணி வேல்விழா சபைக் கூட்டம்வரும் 17ம் திகதிபுதன்கிழமை காலை பத்துமணியளவில் நல்லூர் ஆதினத்தில் ஆதினமுதல்வர் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

சபையின் செயலாளர் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் இத்தகவலைத்தெரிவித்தார்.

## இசைவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் மாவட்ட கலாச்சாரப் பேரவையின் ஆதரவில் நல்லை ஆதினத்தில் நடைபெற்று வரும் ஐந்துநாள் இசைவிழாவின் இன்றைய 4ம் நாள் நிகழ்ச்சிக்கு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் தலைமை தாங்குவார்.

பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் திரு. கே. இராமநாதன், செல்வி நாகம்மா கதிர்காமர், திரு. எல். திலகநாயகம்போல் ஆகியோர் பாடுவார்கள்.

(வா)

## அடிக்கடி மின்சார கோளாறு

நெல்லியடி, ஞாயிறு.

நெல்லியடிப் பட்டினசபைப் பிரதேசத்திற்குட்பட்ட இராஜ கிராமமும் அங்குசெல்லும் கன்பொல்லை வீதியும் அடிக்கடி மின்சாரக் கோளாறு காரணமாக இருளில் மூழ்கிக் கிடக்கிறது. சில வேளைகளில் தொடர்ச்சியாக 15 மணித்தியாலங்களுக்கு இப்பகுதிக்கு மின்சாரவசதி கிடைப்பதில்லை.

அதேவேளையில் இதர பகுதிகளில் மின்சாரம் பூரணமாகக் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் தின விழா

[வேலணை]

வேலணை கல்விவட்டார தமிழர்தின விழா எதிர்வரும் 26ம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## இன்று தீர்த்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய தீர்த்த உற்சவம் இன்று காலை எட்டுமணிக்கு நடைபெறும். பிற்பகல் 5-30 மணிக்கு கொடியிறக்க நிகழ்ச்சி இடம்பெறும். (வா)

## இன்று ரதோற்சவம்

வேலணை, ஞாயி

வேலணை வடக்கு இலந்தைவனம் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று இன்று 15ம் திகதி ரதோற்சவமும் நாளை 16ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் திருவிழா முடிவடைய விருக்கின்றது.

## கல்விப்பொருட்காட்சி ஒத்திவைப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

எதிர்வரும் 19ம், 20ம் திகதிகளில் நடைபெறவிருந்த வட்டுக்கோட்டை கல்விவட்டார பாடசாலைகளின் கல்வி பொருட்காட்சி இம்மாத இறுதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பாடசாலைகளின் கல்விப்பொருட்காட்சி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியிலும், ஆரம்பபாடசாலைகளின் கல்விப் பொருட்காட்சி பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலத்திலும் நடைபெறவுள்ளன. (இ)

## ஆசிரியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் கல்விபயில முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலயத்தில் 282 பிள்ளைகள் கல்விபயில்கிறார்கள் ஆனால் மூன்று ஆசிரியர்கள் மட்டுமே கடமைபுரிகிறார்கள்

மேலும் 11 ஆசிரியர்கள் தேவைப்படுவதாக பெற்றோர்கள் கல்விப்பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளனர். (மா)

## படுவான்கரை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்ட 5 கிராமங்களிலும் மக்களும், மற்றும் அயல் கிராமங்களில் வசித்து வந்த மக்களும் அகதிகளாகி காடுகளில் கடந்த 5 நாட்களாகத் தஞ்சம் புகுந்திருந்தனர்.

உடுத்த உடுப்புகளுடன் உணவின்றி பட்டினியுடன் கடந்த 5 நாட்களாகத் தஞ்சம் புகுந்திருந்த மக்களுக்கு உணவுவசதி அளிப்பதற்கு இன்று நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (மா)

## திருமலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் திடீர் திடீரென கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல்களை நடத்தினர்.

இத் தேடுதலின்போது ஆயிரக் கணக்கானோர் கைதுசெய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கைதானவர்கள் முகமூடி அணிந்த நபர்களின் முன்னிலையில் அடையாளம்காண்பதற்கு நிறுத்தப்பட்டு, விசாரணைசெய்யப்பட்டனர்.

விசாரணையின்பின்னர் சிவன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த 17 பேரும், செல்வநாயகபுரம், அன்புவழிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 83 பேரும் தடுத்து வைக்கப்பட்ட பின் ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். (மா)

## இலங்கையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டார்.

''உள்நாட்டுப் பூசல் தொடருமானால் இலங்கைப் பொருளாதாரத்தில் எதிர்காலம் மிகவும் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் ரொனி தொடர்ந்து கூறியதாவது; வெளிநாட்டு வங்கி எதுவும் இதுவரை இலங்கையிலிருந்து விலகிக்கொள்ள வில்லை ஆயினும் பலவெளிநாட்டு வங்கிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று வருடங்களாகத் தீவிரமடைந்துள்ள இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னைகள் வெளிநாட்டு முதலீடுகள், வர்த்தகம் மற்றும் உல்லாசப் பயணத்துறையில் பலத்ததாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன'' என்றார்.

பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இடங்களின் புனரமைப்புக்கு சர்வதேச உதவியைக் கோருவீர்களா? என அமைச்சரிடம் கேட்கப்பட்டபோது

இத்தடவை தமது மகாநாடுகளின்போது அத்தகையஉதவிகளைத்தம்மால் கேட்கமுடியாதென்றும்இலங்கையில்அமைதி ஏற்படும்வரை இந்த உதவி குறித்துக் கோருவது அசாத்தியம் என்றதோரணையில் திரு. ரொனிபதிலளித்தார்.

## ''பிறரை நேசிப்பதன்மூலம் சந்தோஷமாக வாழலாம்''

### சாரணர் விழாவில் பேச்சு

பளை, ஞாயிறு.

''தன்னைப்போல் பிறரை நேசிப்பதனைப் பழகி நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் சாரணர் இயக்கத்தில் சேர்ந்து 'பேடன் பவலின் கொள்கைகளைக் கடைப்பிடித்தால் எல்லோரும் சந்தோஷமாக வாழலாம்''.

இவ்வாறு பளை மகா வித்தியாலய சாரணர்கள் சமூக சேவை வாரவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட உதவிஆணையாளர் திரு. இ. சின்னத்தம்பி கூறினார்.

இவ்வைபவத்தில் குருளைச் சாரணர் தலைவர் திரு. மா. புவனேந்திரன் உரையாற்றுகையில், ''இன்று உலகில் 118 நாடுகளில் ஒரு கோடியே 80 லட்சம் சாரணர்கள் இருக்கிறார்கள். இதில் யப்பானிய மக்களில் அநேகர் சாரணிய கோட்பாடுகளுக்கமைய வாழ்கிறார்கள். இதனால் அங்கு பிரச்னைகளும் குறைவாகவே யுள்ளது'' என்றார்.

சாரணர்கள் பொதுச்சேவைகளில் ஈடுபட்டுப் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற வேண்டுமென்றும் அவர் மேலும் பேசுகையில் கேட்டுக் கொண்டார். [சி]

## ஹமீத்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைகளுக்கு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான பேச்சு வார்த்தையின்போது நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல்லும் இந்தியா செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [கூ-வா]

## மட்டு பொலிஸ்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

திசைதிருப்புவதற்காகவே பொலிஸ் நிலையத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதன் மூலம் இந்த நடவடிக்கையிலீடுபட்ட அதிரடிப் பொலிசை வாபஸ்பெறவேண்டிய நிலைக்கு அரசு உள்ளாகியுள்ளது''. [மா]

## 'டோச் லைட்' --

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கு கொண்டு சென்று தனது தாயாரிடம் கொடுத்துள்ளார்.

அதனை அவர் இயக்க முயற்சித்தபோது அதனுள் இருந்த குண்டு வெடித்ததில் ஸ்தலத்திலேயே அவர் பலியானார்.

கலாவெவ என்னுமிடத்திலும் வீதியில் இரு டோச்லைட்டுக்களை வயோதிபர் ஒருவர் கண்டெடுத்துள்ளதைத்தொடர்ந்து அவற்றில் ஒன்றைஅவர் இயக்க முற்பட்டவேளை அது வெடித்ததில் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

இச்சம்பவங்களை அடுத்து அரசு வெளியிட்டுள்ள எச்சரிக்கை அறிவிப்பில்,

வீதியோரங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் எவ்வித பொருட்களையும் பொதுமக்கள் தொடக்கூடாதென்று தெரிவித்துள்ளது.

இவற்றினுள் வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென்றும், அதனால் இவற்றைத் தொடக்கூடாதெனவும் குறிப்பாக பேனா, தீப்பெட்டி, டோர்ச் போன்றவற்றை யாரும் எடுக்கக் கூடாதெனவும் அரசு மேலும் அறிவித்துள்ளது. [ஊ]

## கட்டுப்பெத்தைக்கு---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வருடம் ஒரேயொரு தமிழ் மாணவிக்கே அங்கு கல்விபயில அனுமதி கிடைத்தது! இவர் கொழும்பைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது.

கட்டிடக் கலைத்துறைக்கு பிரஸ்தாப தமிழ் மாணவி தெரிவாகியுள்ளார். [ஔ]

## 4-வது நாளாக பொருட்காட்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் சம்த்திரிசியார் [சென். பற்றிக்ஸ்] கல்லூரியில் இன்று 4வது நாளாக பொருட்காட்சி நடைபெறுகிறது

யாழ் மறுமலர்ச்சிக் கழகமும் மாணவர் முன்னணியும் இணைந்து நடாத்திவரும் இப் பொருட்காட்சியை யாழ். குடாநாட்டெங்கிலுமுள்ள மாணவ மாணவிகள் பார்த்து பயனடைந்துவருகிறார்கள். [மா]

## கால்நடை வளர்ப்போர் சங்கம்

வேலணை, ஞாயிறு

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர்களுக்கும், வளர்க்க முன்வருவோரின் நன்மைகளைக்கருத்தில் கொண்டு கால்நடை வளர்ப்போர் சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்கு வேலணைப் பகுதி அரசாங்க கால்நடை வைத்தியதிகாரி செ. மாணிக்க வடிவேலு முன்வந்துள்ளார்.

இந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக எதிர்வரும் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை

(8-ம் பக்கம் பார்க்க)

# மன்னார் செய்திகள்

## இளைஞர் மத்திய நிலையம்

அண்மையில் எருக்கலம் பிட்டியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மன்னார் மாவட்டக் காரியாலயத்தின் ஆதரவில் ஓர் இளைஞர் மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது. மன்னார் பிரிவு உதவியரசாங்க அதிபர் திரு வே. சண்முகநாதன் இந்நிலையத்தை திறந்துவைத்த நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இம் மத்திய நிலையத்தில் வாசிகசாலை இளைஞர் கைப்பணி பொழுது போக்கு சாதனங்கள் போன்ற வசதிகள் நிறுவப்பட்டுள்ளன,

## கடன் வசதி

மன்னார் மாவட்ட ஐக்கிய நாணயச் சங்கம் மாவட்டத்திலுள்ள மாதாந்தம் 1250 ரூபாவிற்குக் குறைவான சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு மலசல கூடம் கட்டல, தளபாடம் வாங்குதல் போன்ற தேவைகளுக்காக ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் தலா 3000 ரூபா கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. இக் கடன் தொகையை ஐந்து வருடங்களுக்குள் செலுத்த வேண்டும்.

## போட்டி

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரினால் நடாத்தப்படும் முகாமைத்துவப் போட்டியை முன்னிட்டு மன்னார் பிரிவு உதவியரசாங்க அதிபர் திரு. வே சண்முகநாதன் தலைமையில் ஏனைய அலுவலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் சேர்ந்து அடுத்த மாத நடுப்பகுதியில் மன்னார் உதவியரசாங்க அதிபர் அலுவலகத்தில் சிரமதானம் மரம் நாட்டுவிழாக்களை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## பராமரிப்பு நிலையம்

மன்னார் மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு பராமரிப்பு நிலையத்தினர் மாவட்டத்திலுள்ள சகல அரச வைத்திய சாலைகளிலும் விசேஷட குழந்தைகள் பிரிவு என்ற பகுதியை ஆரம்பித்து அதற்குத் தேவையான மருந்து வகைகள் உபகரணங்கள் முதலுதவிப் பெட்டிகள் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

அத்துடன் கர்ப்பவதிகளின் நலன் கருதி அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் ஊசி வகைகள் மருந்துகள் போன்றவற்றை வைத்தியசாலைகளுக்கு வழங்கியுள்ளது.

குறிப்பாக மன்னார், அடம்பன் திருக்கேதீஸ்வரம்போன்ற வைத்தியசாலைகட்கு தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

## மரமுந்திரிகைத் திட்டம்

மன்னார் மாவட்டத்தில் மரமுந்திரிகைப் பயிர் செய்யக் கூடிய வசதிகள் இருந்தும் அதனைச் செயல்படுத்த முடியாமல் இருப்பதையிட்டு அண்மையில் இடம் பெற்ற மன்னார் பிரதேச மண்டல சபையில் கலந்து ஆலோசிக்கப்பட்டு உடனடியாக மரமுந்திரிகைப் பயிர்செய்கைக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமென தீர்மானமெடுத்து அதற்கு வழங்கப்படும் மானியத்தை பயிர் செய்வோர்க்கு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் தீர்மானம் எடுக்கப்பட்டது. பிரதேச சபைத் தலைவர் சட்டத்தரணி கயஸ் பல்தாவ தலைமையில் இக் கூட்டம் இடம் பெற்றது.

## மன்னார் மேற்கு வெற்றியீட்டியது

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் அண்மையில் எருக்கலம்பிட்டியில் ஒரு விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது இதில் விடத்தல்தீவுக் கழகம் பெரியமடு கழகம் நெடுங்கண்டல் கழகம் மன்னார் மேற்கு கழகம் போன்றவை பங்கெடுத்தன. கூடிய புள்ளிகளைப் பெற்று மன்னார் மேற்கு தேசிய இளைஞர் மன்றம் முதலிடம் பெற்றது மாவட்ட இளைஞ மன்ற அலுவலர் திரு அ சக்திவேல் போட்டிகளை நெறிப்படுத்தினர், [இ]

## ஆணையாளருக்கு நன்றி

யாழ்ப்பாணம், திங்கள்

நீண்ட காலமாக உடைந்த நிலையில் இருந்த கொழும்புத் துறை வீதியில் இருந்து பிரியும் விதானை வீதிக்கு வலது புறமாக உள்ள விளங்கால் அணைக்கட்டு திருத்தி அமைக்கப்பட்டு போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்கிய யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு.சீ.வி.கே சிவஞானத்துக்கு சுண்டிக்குளி சைவ மகாசபையினர் நன்றி தெரிவித்துள்ளனர். (வா)


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய வருஷம் ஆவணி மாதம் 30ந் திகதி (15 9 86) திங்கட்கிழமை பி ப. 4-00 மணிமுதல் 5 00 மணிவரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்

| எமது சிரேட்ட புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **பவானந்தன்** | **சாரதாதேவி** |
| (Electrical Engineer C. E. B. Colombo) | (சீமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலயம் கோண்டாவிலில் மாங்கல்ய தாரணம் செய்யத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. ஆ. சுப்பிரமணியமும் பாரியாரும்
(இளைப்பாறிய ஆசிரியர்)
கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

திரு. சி. க. சபாபதி
முன்னாள் கி ச. தலைவர்
கொக்குவில்,
நவரத்தினராசா வீதி
கோண்டாவில்.

[A 1278]


# இலங்கையின்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

"...எனது உணர்ச்சிகளை என்னால் வெளிக்காட்ட முடியவில்லை. தமது உழைப்பில் என்னைப் பார்த்த எனது இரு மகன்கள்... அவர் இறந்து விட்டால்நான் என்ன செய்ய, அந் நேரத்தில் நான் ஒரு பைத்தியக்காரனைப் போலிருந்தேன்..."

ஆனால் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்ற தகவல்கள் அவர்களின் பெற்றோர்களுக்குக் கிடைத்த போது அவர்கள் இதுபற்றிக் கல்முனைப் பிரஜைகள் குழுவுக்கு அறிவித்தனர் மே 18இல் அக்குழுவின் தலைவர் போல் நல்ல நாயகம் மாவட்ட இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது சில கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும். அயலில் சில 'பயங்கரவாதிகள்' கொல்லப்பட்டதாகவும் கல்லடி முகாமுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவருக்குக் கூறப்பட்டது அதன்படி அவர் கைது செய்யப்பட்ட சிலரின் பெற்றோரிடம் கல்லடி முகாம் சென்ற போது மேற்படி சம்பவத்தில் கைது செய்யப்பட்டோர் அங்கு இருக்கவில்லை.

பின்னர் போல் நல்லநாயகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இச் சம்பவம் பற்றி விசாரிக்குமாறு மட்டு பொலிஸ் அத்தியட்சகருக்கு இணைப்பதிகாரி பணித்தார் மே 20 ம் திகதி எஸ் பி பொலிஸ் குழு, போல் நல்ல நாயகம், 5 பெற்றோர் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றனர்.

த. பாக்கியராஜாவின் தந்தையின் வாக்குமூலம்,

"...இளைஞர் சுட்டுப்புதைக்கப்பட்ட இடத்தை அயலிலுள்ள கிராமத்தார் காட்டினர். அங்கு ஜீப்சென்ற அடையாளங்களும், மண் தோண்டப்பட்டு மூடப்பட்ட அடையாளங்களும் இருந்தன பொலிஸ் எஸ்.பி... என்னை அழைத்து அங்கே காணப்பட்ட சேர்ட்டையும், சாரத்தையும் பார்க்கச் சொன்ன போது அவை கைது செய்யப்பட்ட சமயம் என்னுடைய மகனால் உடுத்திருக்கப்பட்டவை என அறிந்தேன் சேர்ட்டினுள்ளிருந்து அடையாள அட்டையும் என்னுடைய மகனுடையதென்பதை அறிந்தேன் அதன் பின்னர் எஸ் பி யின் உத்தரவின் பேரில் குறிப்பிட்ட ஒரு இடம் தோண்டப்பட்ட போது ஒரு சடலம் காணப்பட்டது. ஆயினும் மேலெட்ட கிவிட்டபடியினாலும் மேல் மணல் தோண்டப்பட தோண்டப்பட உடனுக்குடன் விழ ஆரம்பித்ததாலும் அச் சடலத்தை முழுமையாக தோண்டி எடுக்கவோ அன்றி முகத்தை அடையாளம் காணமுடியவில்லை..."

இது பற்றி யாருக்கும் எதுவும் தரிவிக்கவேண்டாம் என அங்கு வந்திருந்த பெற்றோரைப் பணித்த பொலிஸார் மறு நாள் காலை அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையம் வருமாறு பணித்தனர்.

## விசாரணை நிறுத்தம்

ஆயினும் மறு நாள் விசாரணைகள் திடீரென நிறுத்தப்பட்டன. அத்துடன் இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அச் சடலம் அதிரடிப் படையினரால் தோண்டி எடுக்கப்பட்டு அப்புறப் படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்கு புதைக்கப்பட்ட ஏனைய சடலங்கள் 6-8 க்குமிடைப்பட்ட அதிரடிப் படையினரால் 18ம் திகதியளவில் கொண்டுசெல்லப்பட்டன என கூறப்பட்டுள்ளது. பத்திரிகை அறிக்கைகளின்படி இச்சடலங்கள் தமிழ்க் குழுவொன்றினால் தோண்டப்பட்டு பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு, புகைப் படமெடுக்கப்பட்டு மீண்டும் புதைக்கப்பட்டன

வென அதிரடிப் படையினருக்குக் கிடைத்த செய்திகள் அவர்களைச் சஞ்சலமடையச் செய்துள்ளது.

## அரசின் நிலை

மேற் கூறப்பட்ட சம்பவத்தில் 'காணாமல் போன' எவரும் அதிரடிப்படையினரால் கைது செய்யப்படவோ அல்லது அவர்கள் ரகசியமாகக் கொல்லப்பட்டுப் புதைக்கப் படவோ இல்லை என்பதே அரசின் நிலை.

(நாளை தொடரும்)

## முல்லைத்தீவு வைத்தியசாலையில்

# நோயாளர்கள் வெளியேற்றம்

முல்லைத்தீவு, ஞாயிறு

ஒட்டுசுட்டானில் பதற்றம் காரணமாக கடந்த ஒரு வார காலமாக மகாவித்தியாலயம் மூடப்பட்டிருக்கிறது. இராணுவ முகாம் 200 யார் தூரத்தில் இருப்பதால் பாடசாலைக்குச் செல்ல ஆசிரியர்களும், மாணவர்களும் பயப்படுகின்றார்கள்.

முல்லைத்தீவிலும் இராணுவ முகாம் வைத்தியசாலைக்குச் சமீபத்தில் முன் பக்கத்திலும், பின் பக்கத்திலும் இராணுவ சென்றிகள் நிற்பதனாலும் நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்லத் தயங்குகிறார்கள். கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பதற்றம் காரணமாக சகல நோயாளர்களும் வைத்தியசாலையை விட்டு வெளியேறி விட்டார்கள்.

டாக்டர்கள் விடுதிகளில் இருந்து டாக்டர்களை வெளியேறுமாறும் இராணுவத்தினர் கேட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [இ]

## 'தர்மயுத்தம்' முதலாம்இடம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சங்கீத, நடன, நாடகப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் 'தர்ம யுத்தம்' என்ற நாடகம் முதலாமிடத்தைப் பெற்றது.

மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபற்ற இந்த நாட்டிய நாடகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது

கர்நாடக சங்கீத குழுநிலைப் போட்டியில் கனிஷ்ட பிரிவிலும், சிரேஷ்ட பிரிவிலும் இக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டிகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த வாரம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா தலைமையில் நடைபெற்றது. (வா)

## மின்சார விநியோகம்

கொழும்புத்துறை, ஞாயிறு

மாங்கொல்லைக் கிராமம் மின் விநியோகம் விரைவில் கிடைக்கவுள்ளது. தையிட்டியில் நிறுவப்படும் மின்மாற்றி செயற்படத் தொடங்கியதும் இம் மின் விநியோகம் செய்யப்படும். இது சம்மந்தமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டமைக்காக அபிவிருத்திச்சபை காங்கேசன் துறை உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. த. மகாலிங்கத்திற்கு மாங் காலை இளைஞர் முன்னேற்ற மன்றச் சனசமூக நிலையம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. [இ]

## செங்கலடியில் சடலம்

மட்டக்களப்பு, ஞாயிறு

செங்கலடிச் சந்தியில் வெட்டிக் கொல்லப்பட்ட ஒருவரின சடலம் காணப்பட்டது

கிண்ணையடியைச் சேர்ந்த நடராசா என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டதாகத் தெரியவருகிறது. [மா]

## திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் அஞ்சனந்தாழ்வு புனித ஆரோக்கிய மாதா ஆலய திருவிழா இம் மாதம் 17ந் திகதி ஆரம்பமாகிறது 21 ந்திகதி மாதாவின் திருச்சொருப சுற்றுலா இடம்பெறும், [ச]

## தாச்சி சுற்றுப் போட்டி

சாவகச்சேரி ஞாயிறு

சாவகச்சேரி சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியிலான தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்றினை இம் மாதம் 27ம் திகதி முதல் நடாத்தி வருகின்றது

இச் சுற்றுப் போட்டியில் 30 க்கு மேலான கழகங்கள் பங்குபற்றுகின்றன. [இ]

## ஓய்வு பெற்றார்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

மத்துகம பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றிய சில்லாலையைச் சேர்ந்த திரு, எஸ் தோமஸ் இம்மாதம் தொடக்கம் தமது 31 வருட கால பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

## சீனிவிலை அதிகரிப்பு

நெடுந்தீவு ஞாயிறு

உணவுத்திணைக்களம் சீனியின் மொத்த விலையை கிலோ ஒன்றிற்கு பதினைந்து சதத்தால் அதிகரித்துள்ளது.

சில்லறை விலை நிர்ணயிக்கப்படாதபோதிலும் அதிலும் 15சதம் விற்பனையாளர்களால் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிகின்றது.

இவ்விலை அதிகரிப்பு இம் மாதம் ஒன்பதாந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. (க)

## மணிக்கூடு மீட்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை தென்னிந்திருச்சபை தேவாலயத்திலிருந்து திருடப்பட்ட சுவர் மணிக்கூடு விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் மீட்கப்பட்டு தேவாலய நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது (இ)

## நியமனம்

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவு புனித பிரான்சீஸ் சவேரியார் தேவாலயத்தின் புதிய குருவாக வணக்கத்திற்குரிய பிறதர் கிறிஸ்ரி செல்வராசா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சனசமூக நிலையங்கள்

# "எல்லாச்சமூகங்களுக்கும் சேவைபுரிய வேண்டும்"

அராலி, வெள்ளி

''கிராமங்களில் உள்ள மக்கள் ஒவ்வொரு சமூகத்துக்கு ஒவ்வொரு சன சமூக நிலையம் என பிரிந்தால் கிராமப் பிரிவினை தான் ஏற்படும் இந் நிலையில் சன சமூக நிலையங்கள் தமது சமூகத்துக்கு மட்டும் சேவை செய்வதென்றில்லாமல் எல்லா சமூகங்களுக்கும் பயன்படும் வகையில் சேவை புரிய வேண்டும்.''

இவ்வாறு, அராலி வடக்கில் புத்தாக நிறுவப்பட்டுள்ள செல்வா சன சமூக நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் செயலாற்று உப குழு உறுப்பினரும் முன்னாள் கிராமோதயத்தலைவருமான திரு நா. குகராசா குறிப்பிட்டார்.

செல்வா சன சமூக நிலையத் தலைவர் திரு. மு. யோகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. நா. குகராசா தொடர்ந்து உரையாற்றுகையில் ''தந்தை செல்வாவின் பெயரை கொண்டு இச் சன சமூக நிலையம் அமைந்திருப்பது மிகவும் நல்லது செல்வா சன சமூக நிலையம் விருட்சமாக வளர்ந்து தமிழ் மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மங்கள விளக்கேற்றிய அராலி அபிவிருத்தி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கா. ச சற்குணநந்தன் உரையாற்றுகையில், ''சன சமூக நிலையத்திற்கு மக்களின் பங்குதான் அவசியம். செல்வா சன சமூக நிலையம் உருவாகியதற்கு இளைஞர்கள் தான் முக்கிய காரணம். சன சமூக அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்ய வருடா வருடம் சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு தான் அபிவிருத்தி வேலைகள் செய்து வருகின்றோம். தற்போது இலாகாக்களின் பொறுப்பில்தான் நிதி ஒதுக்கீடு இருக்கிறது இந்த வகையில் சன சமூக நிலையம் முக்கியமான தொன்றாகும்'' என்றார்.

செல்வா வீதியை பதிவு செய்து தரும்படி நிலைய தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வீதிகளுக்கு பெயர் அமைத்தல் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் போன்றவர்களின் சிபாரிசு இருக்க வேண்டிய தொன்றாகும் என்றும் செல்வா வீதியில் உள்ளவர்களிடம் வீதிப்பெயர் சம்பந்தமான மகஜர் வாங்கித் தரும்படியும் இதற்கான பதிவு செய்தலுக்கும் முயற்சி எடுப்பதாகவும் கூறினார்

அராலி இந்துக் கல்லூரி அதிபர் திரு சி. டாஸ் உரையாற்றுகையில் தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு சன சமூக நிலையங்கள் எல்லா இடமும் அமைக்கப்படவேண்டும். கல்வி சம்பந்தமான விடயங்கள் அனைத்தும் சன சமூக நிலையத்தில்தான் தங்கியுள்ளது எல்லாவற்றிற்கும் நாம் ஒழுக்கம், மன உறுதி. தொழில் அர்ப்பணிப்பு என்ற ரீதியில் நடந்து கொள்வோமேயானால் எதிலும் நாம் முன்னேறலாம் என்றார்.

விசேட சேவை அதிகாரி ந சந்திரசேகரம்பிள்ளை தமதுரையில் ஒரு சமூகத்து சன சமூக நிலையம் அவசியமானது என்றும் இச் சன சமூக நிலையம் சம்பந்தமான அபிவிருத்திகளுக்கு தன்னால் ஆன உதவிகளை செய்வதாகவும் உறுதியளித்தார்.

திரு மு. யோகேந்திரன் தலைமை உரையின்போது இச் சன சமூக நிலையம் ஆரம்பிக்க ஒத்துழைத்த சகலருக்கும் நன்றி தெரிவித்தார். செல்வன் சிவ உதயகுமாரின் வரவேற்புரையுடன் ஆரம்பமான

[7-ம் பக்கம் பார்க்க]

## பொதுமக்கள் கஷ்டம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு பகுதியில் சமாதான நீதிவான் எவரும் இல்லாததினால் பொதுமக்கள் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். பண்டத்தரிப்பு சமாதான நீதிவான் ஒருவரை பண்டத்தரிப்புப் பகுதிக்கு நியமிக்கப்பட வேண்டுமென்று சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் மூலம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது. [வா]

## அன்பளிப்பு

சாவகச்சேரி, ஞாயிறு

யாழ் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்படுகின்ற அகதிகள் முகாமிற்கு 5000 ரூபாவை அன்பளிப்பாக வழங்கி உள்ளது. [இ]

* * *

சாவகச்சேரி, ஞாயிறு

கைதடியில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆயுர்வேத மூலிகைத் தோட்டத்திற்கான ஆரம்ப வேலைகளை ஈடு செய்யவென பனம் பொருள் அபிவிருத்திச் சபை ரூபா 5000 வை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

மூலிகைத் தோட்டக் காணி துப்பரவு செய்கின்ற பணிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுவருவது குறிப்பிடத் தக்கதாகும். [எ]

## பணிகளுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் கலைத்துறையிலும் கிராமிய விளையாட்டுத் துறையிலும் அரிய சாதனை படைத்துவரும் சாவகச்சேரி சித்தி விநாயகர் கலைமன்றத்தின் பணிகள் பாராட்டிற்குரியது என்று சாவகச்சேரி சித்திவிநாயகர் கலைமன்றத்தால் புதிதாக பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலையரங்க திறப்பு விழாவில் சிறப்புரையாற்றுகையில் சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் ரி. நவரத்தினராசா கூறினார்.

பெரியமாவடியில் அமைந்துள்ள இக் கலையரங்கத் திறப்பு விழாவிற்கு அண்ணாவி சு. பு கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக உதவியரசாங்க அதிபர் எஸ் துரைராசா கலந்து கொண்டார். சமூக சேவையாளர் திரு இராசதுரை கலையரங்கினை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். [கிளி- நிரு- வா]

# "ஆங்கிலத்தை கற்பதுடன் பேசியும் பழக வேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இன்று ஒரு வேலை நாளாக இல்லாத போதிலும் ஆசிரியர்கள் பாடசாலை மாணவர் மேலுள்ள அக்கறையாலும் ஆங்கில மொழியிலுள்ள ஆசையாலும் இவ்வளவு பெருந் தொகையாக வந்துள்ளதைப் பார்க்கும் பொழுது நான் மிகவும் ஆனந்தம் அடைகிறேன் ''

ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரம், யாழ் மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான ஆங்கில தினப் போட்டி முதல் நாள் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஆற்றிய தலைமையுரையில் இவ்வாறு கூறினார்.

கடந்த சனியன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமான மேற்படி நிகழ்ச்சியில் கல்வி அதிகாரி திரு. சி. சோமசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினர் தமதுரையில்.

''மாணவர்கள் தமது பாடசாலையில் ஆங்கிலப் பாடவேளையிலாவது ஆசிரியருடனும் ஆங்கிலத்தில் பேச முனைய வேண்டும் ஆங்கிலம் கற்கும் பொழுது அதற்குரிய சூழலையை நாம் ஏற்படுத்த வேண்டும். வீட்டில் ஆங்கிலம் பேசக் கூடியவர்கள் இருந்தால் அவர்களுடன் கூச்சப்படாது பேச வேண்டும் அப்பொழுது தான் பிழைகளைத் திருத்தி முன்னேறலாம். சிலர் கூறுவார்கள். ஆறு மாதத்தில் ஆங்கிலம் பேச எழுதக் கற்றுக் கொடுக்கலாம் என்று மந்திரத்தால் ஒரு மொழியைப் படிக்க முடியாது. எமது ஆசிரியர்கள் முறைப்படி சகல பயிற்சிகளையும நவீன முறைகளையும் கற்றுள்ளார்கள்: நாளுக்கு நாள் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப அவர்களும் புதிய முறைகளைப் புகுத்திக் கற்பிக்கிறார்கள்'' என்றார்.

மேற்படி நிகழ்ச்சியில் கல்வி அதிகாரி திரு மகேசன் நல்லூர் வ. க அதிகாரி, காங்கேசன் துறை வ. க அதிகாரிகளும், யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபரும கலந்து கொண்டார்கள்.

ஆங்கில ஆலோசக ஆசிரியர்களான திரு பி ஆர். அருமைநாயகம் திரு எஸ் தெய்வதவபாலன் ஆகியோர் இப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்தனர். இப் போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 15ம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும், 3ம் நாள் நிகழ்ச்சிகள் யாழ். இந்துக் கல்லூரியிலும் 4ம் நாள் நிகழ்ச்சிகள் திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையிலும் நடைபெறும். (வி)

## அராலித்துறையில் தங்குமிடம்

புங்குடுதீவு, ஞாயிறு

பொதுமக்களின் நன்மை கருதி அராலித்துறையில் தங்குமடமொன்றை ஆரம்பிக்கும் வேலைகள் புங்குடுதீவு பிரயாணிகள் நலன்புரிச்சங்கத்தினரால் ஆரம்பமாகி வேலைகள் நடைபெற்று வருகின்றது. [இ]


## வெளிநாடு பிரயாணம்

டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி

செல்லவிருக்கும் பிரயாணிகளை ஒரு காலதாமதமுமின்றி அனுப்பிவைப்பதற்கு சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

அமெரிக்கா கனடா

செல்லவிருக்கும் பிரயாணிகட்கு சிறிது கால தாமதம் ஏற்படினும் நிச்சயமாக அனுப்பிவைக்கப் படுவர்.

முழுவிபரங்களுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வ. நல்லையா

அளவெட்டி.

[C 4557

## VACANCY

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE VADDUKODDAI

### Instructors

I. AUTOMOBILE TECHNOLOGY

II. FOUNDRY TECHNOLOGY

Candidates should have a recognised Diploma or Equivalent and minimum two years teaching experience.

III. CARPENTRY TRADE

IV. MASONRY TRADE

Candidates should have recognised practical exrerience in teaching above trade at Class I skill level.

Salary: About 1,000/- — 1,250/- all inclusive per month, negotiable.

Apply with full bio-data and two referees before 19th September, 86.

DIRECTOR

[A-1271]


1964ஆம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)

## அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியைச் சுவீகரித்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை மேற்குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

யாழ் மாவட்டம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, காரைநகர் மேற்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு எ வி ஞானரத்தினம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 490 தொடக்கம் இலக்கம் 621 வரையுள்ள படங்களில் விபரிக்கப்பட்டுள்ளதும் 128 காணித்துண்டுகளை உள்ளடக்கியதும் 28 82235 கெக்டார்ஸ் விசாலமுள்ளதுமான காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு:. ''சேக்குளர்'' றோட்டும் நீலங்காடு வீதியும்.

கிழக்கு:- வாய்க்கால்

தெற்கு - கடற்கரையும் கடற்படைத்தளமும்

மேற்கு:- திரு. கே. ஏ. செல்லையாப்பிள்ளையும் திருமதி லீலாவதி நவரட்டினமும் ஏனையோரும் உரிமைகோரும் காணி.

மேற்குறித்த காணியின் எல்லைக்குள் தத்தமது சொந்த வீடுவாசல்களை இழந்து வெளியேறி இதுவரை எதுவித நஷ்டஈட்டுப் பணமும் பெறாதவர்கள் அத்தகைய வீடுகள் அமைந்திருந்த காணித்துண்டில் அவர்களுக்குரிய உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் 1986ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30ம் தேதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் குறித்த காணியின் உறுதிகளையும், குறுகிய காலத்துப் பதிவேடு மற்றும் இதுதொடர்புடைய ஆவணங்களையும் சமர்ப்பிக்கும்படியும் இத்தால் கேட்டுச்கொள்ளப்பட்டுகின்றனர். மேலதிக விபரங்களுக்கு மேற்குறித்த சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 86-03-14, 86-06-.6 ஆம் தேதிய அறிவித்தல்களைப் பார்க்குக.

ச. பொ. பாலசிங்கம்,

உதவி அரசாங்க அதிபர் (காணி)

யாழ் மாவட்ட செயலாளரும்,

அரசாங்க அதிபருக்குமாக.

கச்சேரி,

யாழ்ப்பாணம்,

1986-09-12.

[A 1276]

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மு. சுந்தரராஜ்
படைப்பு: 7-10-1955
அழிப்பு: 17-08-1986

17-8-86ல் மரணமடைந்த எங்கள் அன்பு மகனின் அந்தியேட்டி கிரியைகள் 16-9-86ல் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்புத் தந்தை,
சகோதரங்கள்.
சிவபுரம் றோட்,
வல்வெட்டித்துறை
(C 4599)

## பொருட்காட்சி

பண்டத்தரிப்பு, ஞாயிறு வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் பாடசாலைகளின் பொருட்காட்சி இம் மாதம் 19ம் 20ம் திகதிகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (வா)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வேலுப்பிள்ளை கிருஷ்ணர்
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)
தோற்றம்: 14-06-1917
மறைவு: 16-08-1986

அன்பான குடும்பத் தலைவனாய், பண்பின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய் உங்கள் கஷ்டத்தையும் பாராமல் எங்களை ஆளாக்கிவைத்த அன்புத் தெய்வமே; எங்களால் நீங்கள் சந்தோஷமும். ஆறுதலும் பெறும் நேரம் எல்லோரையும் பரிதவிக்க விட்டுத் திடீரென மறைந்து விட்டீர்களே ஐயா! உங்கள் ஒளி முகமும், சொல்லும், செயலும் காலம் முழுவதும் எம் நெஞ்சங்களை விட்டகலுமோ? தங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.
''மலர் வாசா'',
பொன்னாலை தெற்கு.
சுளிபுரம். (C 4558)

## பஸ் கட்டண அதிகரிப்புக்கு ஆட்சேபம்

பருத்தித்துறை, ஞாயிறு வடபிராந்திய போக்குவரத்துச்சபை அண்மையில் பஸ் கட்டணங்களை உயர்த்தியிருப்பதனால் பிரயாணிகள் பெரும் பாதிப்புக்குட்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள பருத்தித்துறை பிரஜைகள் குழு பஸ்கட்டண உயர்வுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீளாய்வு செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளது

ஏனைய பிராந்திய போக்குவரத்துச் சபைகள் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தாமலிருக்க வட பிராந்திய போக்கு வரத்துச் சபை மாத்திரம் பஸ் கட்டணங்களை உயர்த்தியிருப்பது இப்பகுதி மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட நீதியற்ற செயலாகுமாகையால் இப்பகுதி மக்களின் நலன் கருதி பஸ் கட்டணங்களை பழைய நிலைக்கே கொண்டுவர வேண்டுமெனவும் கேட்டுள்ளது. (இ)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் (16-9-86) நன்றி நவிலலும்



செல்வன்:
க. தில்லைநாதன் (பாபு)
தோற்றம்:- 15-12-1960
உதிர்வு:- 03-08-1986

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு ஜேர்மனியில் திடீரென மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உங்கள் மதிமுகமும் சொல்லும் செயலும் நகைச்சுவையும் எங்களால் மறக்க முடியுமா! நீங்கள் எமமை விட்டுப் பிரிந்து 45 நாட்கள் சென்றாலும், உங்கள் நினைவு எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். தங்கள் பிரிவால் துயருறும்:

அம்மா, சகோதரர்,
சகோதரிகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

பி. குறிப்பு:- அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 16-09-86 (செவ்வாய்) காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் தயவு செய்து உற்றார், உறவினர் நண்பர்கள் இந்த கிரிகையில் கலந்து கொள்ளுமாறு கேட்கின்றோம். கடந்த மாதம் 19ம் திகதி நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் ஜேர்மனியில் இருந்து அன்னாரின் பூதவுடல் இவ்விடம் கொண்டுவர உதவிய உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்:
குடும்பத்தார்.
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (C 4636)

## 41-ம் நாள் நினைவுதினம்



செல்வி
சிவசுப்பிரமணியம் சுசிலாதேவி
அன்னை மடியில்:
10-5-1965
இறைவன் அணைப்பில்
5-8-1986

எம்குலத்தின் இன்கனியே! புன்சிரிப்பின் பூவிடமே! திங்களென மிளிர்ந்த பொற்சிலையே! பொங்கும் நிலவொளியில் பூக்கும் மலர்ச்சரத்தில் மின்னி மறையும் வெண்மீனில் கலையில் கலைவடிவிலெல்லாம் 'தேவி' நின்திருநிழல் தரிசிக்கின்றோம். நீயில்லாத் துயரில் நித்தம் நாம் வாடுகின்றோம். எப்போ வருவாய் எங்கள் பாச நிலவே நீ!

பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார் தங்கை ஜெயா, மைத்துனர்மார், மைத்துனிமார், உறவினர், நண்பர்கள்
நீர்வேலி வடக்கு
C 4645

## 91-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



த. கிருஷ்ணமூர்த்தி
[ரஹீம் மாஸ்டர்]
தோற்றம்:- 6-10-1953
மறைவு:- 19-06-1986

எங்கள் மீது அன்பு பாசம் கொண்ட ராசு! நீ பிரிந்து ஆண்டுகள் பல கடந்தாலும் உன் நினைவலைகள் என்றும் எம் உள்ளத்தில் அணையா சுடராகவே விளங்கும். உன் இழப்பு உம்மைச் சார்ந்த அனைவருக்கும் பேரிழப்பு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், இலட்சியம் ஈடேறவும் இறைவனை வேண்டுகிறோம். 17-09-1986 அன்று புதன்கிழமை சகோதரர் இல்லத்தில் அதிகாலையில் நடைபெறும் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தாய் சகோதர, சகோதரி, அண்ணிமார், பெருமக்கள், மாமக்கள்.
(C 4630)

## முல்லைத்தீவில் பதற்றம்

முல்லைத்தீவு, ஞாயிறு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதி இராணுவமுகாம் சென்றிகள் மீது விடுதலைப் புலிகள் அடிக்கடி அதிரடித் தாக்குதலை நடாத்தி வருவதால் இப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது

இராணுவ சென்றிகள் மீது போராளிகள் தாக்குதல் நடாத்துகின்றனர். இராணுவத்தினர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடாத்துகின்றார்கள் அதே நேரம் ஹெலிகொப்டர் வான் தாக்குதலை நடாத்துகின்றது, இதனால் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்குச் செல்கின்றனர் (இ)

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 30 (15-9-1986)
கிழமை: திங்கள்
திதி; துவாதசி
நக்ஷத்திரம்; திருவோணம்

மேடம்: நிதிநிலைமையில் விரும்பத்தக்க முன்னற்றம் காணப்படும். புதிய தொழில் முயற்சிகளும் கைகூடலாம். குடும்ப சந்தோசமுமுண்டு.

இடபம்: ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடுவீர்கள் புத்திர சுகத்தி குமிடமுண்டாம் வெளியிடத் தொடர்பிலும் முன்னேற்றம் காணும்

மிதுனம்: ஆயுதபீடைக்கிடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும் மின்னியல் பொறியியல் பகுதியில் கடமைபுரிவோர் கவனம் வேண்டும்.

கடகம்: களஸ்திரசுகம் சேரும். கடமையும் சிறக்கும் காதலர்களுக்கும் மகிழ்ச்சிகரமான செய்திக்கிடமுண்டு.

சிங்கம். தவறுகள் நடக்கலாம். போக்குவரத்தைத் தவிர்க்கவும். பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். நிதானம் அவசியம்.

கன்னி: பொதுத்துறையில் ஆர்வமுண்டு, இல்லத்திலும் இனிமை தவழும். பிதாவழித் தனமும் சேரும்,

துலாம்: மனச்சிறப்புமுண்டு எதிர்பார்த்த விடயம் மகிழ்ச்சியைத் தரும் திடீர்ப்பயணமும் ஏற்படலாம்.

விருச்சிகம்: பொதுசனத் தலைமையும் கிட்டும். வாழ்க்கையில் புதிரான நிலை அதன் படும். கல்வி முன்னேற்றமுண்டு.

தனுசு: குடும்பத்திலும் பிளவுகள் தோன்றும். அவப்பெயரும் ஏற்படலாம். தொழில் மந்தநிலையும் தோன்றும்.

மகரம்: ஏமாற்றத்திற்கு இடமுண்டு. எவ்விடயத்தையும் நன்றாக யோசித்து செயல்படவும் நம்பி நடத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்

கும்பம்: குடும்பம்சீர்பெறும். பிரிந்தவர் மீண்டும் இணைவர். அறிஞர்கள் போற்றபடுவர்.

மீனம்: சகோதர மனச் சஞ்சலம் தென்படும் வேற்றுமைகள் தோன்றும், தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும்.

திருமலை
வே ரவீந்திரன்

## எல்லா...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிர் செய்கை குழு அங்கத்தவர்கள் பலரும் உரையாற்றினர் திறப்பு விழாவை முன்னிட்டு சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நாடகமும் இடம் பெற்றன. திரு. நா. கிருஷ்ணன் நன்றி கூறினர். பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். (ஆ)

## புனர்வாழ்வுக்கான திட்டம்

புனர்வாழ்வு அமைச்சு புனர்வாழ்வுக்கான பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய திட்டமொன்றினை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

1. வர்த்தக, குடியிருப்பு இடங்களுக்கான புனரமைப்பு
2. அசைவுள்ள சொத்துக்களுக்கான புனரமைப்பு
3. பொருளாதார புனர்வாழ்வுக்கான உதவிகள்
4. கூடுதலாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவி
5. ஊனமுற்றவர் அல்லது காயமடைந்தவர்களுக்கான உதவி
6. பாதிக்கப்பட்ட சிறுர்களுக்கான உதவி
7. பாதிக்கப்பட்ட வழிபாட்டுத்தலங்களுக்கான புனரமைப்பு
8. இழந்த அல்லது சேதமடைந்த வாகனங்களுக்கான உதவி
9. கால்நடைகளின் இழப்புக்கான உதவி
10. மீனவர்களின் உடைமைகளின் இழப்பிற்கான உதவி

அளிக்கப்படவேண்டியவிபரங்களடங்கியவிண்ணப்பப் படிவங்களை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் 1986 புரட்டாதி 24ம்ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

1-1-1983லிருந்து 30-09-1986 வரையிலான காலப் பகுதியில் பாதிப்படைந்த சகல நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் உரிய படிவங்களை உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்று பூரணப்படுத்தியபின் 10-10-1986க்கு முன்னர் மீள ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வை. மு. பஞ்சலிங்கம்.
மாவட்டச்செயலாளரும்
அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்

கச்சேரி,
யாழ்ப்பாணம்
11-09-1986
(A 1277)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 15-9-86

# தமிழ்மிதவாதிகளுடன்பேசுவதையே இந்தியா விரும்புகின்றது! - ஜே. ஆர். பேச்சு

கொழும்பு, திங்கள்.

''இலங்கை அரசாங்கம் தமிழ் மிதவாதிகளுடன் குறிப்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் பேச்சுவார்த்தை நடத்து இனப்பிரச்னைக்கான தீர்வொன்றைக் காண வேண்டுமென்ற கருத்தையே இந்தியா கொண்டுள்ளது''.

இவ்வாறு ஜனாதிபதி ஜெயவர்த்தன சுகததாஸ உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற சேவா வனித சங்கமயவின் 3வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

ஜனாதிபதி தமதுரையில் மேலும் கூறியதாவது:-

''இந்தியா ஈழம் கோரிக்கைக்கு எதிராயுள்ளது. இந்தியாவின் ஆதரவுடன் பிரச்னைக்கு அரசியற்தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த முயற்சி தேசிய பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி சமூகத்தின் சகல பிரிவினருடைய வாழ்க்கையையும் மேம்படுத்த உதவும்

''மக்களைத் தூண்டிவிடுவதிலேயே அக்கறைகொண்ட திருமதி பண்டாரநாயக்க போலல்லாமல் இந்த அரசாங்கம் நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலன்களிலும் அக்கறைகொண்டுள்ளது''

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள யோசனைகளை எதிர்ப்பவர்களினால் மக்கள் வழிதவறிவிட மாட்டார்களெனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் திருமதி ஜயவர்த்தன தமதுரையில், தமது சங்கத்தின் கிளைகளைவடபகுதியிலும் விரைவில் திறக்கூடியதாகவிருக்குமென நம்பிக்கையைத் தெரிவித்தார்.

## லெபனுன் செல்ல தடை

கொழும்பு, ஞாயிறு

லெபனுனில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக இலங்கையிலிருந்து அந்நாட்டுக்கு வேலைபெற்றுச் செல்வதை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நிறுத்தியுள்ளது.

லெபனுனில் நிலவும் சிவில் யுத்த நிலைமை காரணமாகவும் அந்நாட்டு பணத்தின் மதிப்புக் குறைந்துள்ளதாலுமே இலங்கையிலிருந்து அந்நாட்டுக்கு பணியாளரை அனுப்ப வேண்டாமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்ஜிகளுக்கு மேற்படி பணியகம் உத்தரவிட்டுள்ளது. [ஊ]

## மர்ம துண்டுப் பிரசுரங்கள்

வவனியா, ஞாயிறு

வவனியா பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் மர்மமான முறையில் பலவகையான துண்டுப்பிரசுரங்கள் போடப்படுகின்றனவாம்.

துண்டுப்பிரசுரம் வெளியிடுவோரின் பெயரின்றி மொட்டையாக இருக்கும் இத்துண்டுப்பிரசுரங்களில் தமிழ்ப் போராளிகள் பற்றியும் அவர்களின் இயக்கங்கள் பற்றியும் விமர்சிக்கப்பட்டுள்ளதாம்

## வேலணை வர்த்தகருடையது

வவனியா, ஞாயிறு

வவனியா மூன்றுமுறிப்புப் பிள்ளையார் கோவிலடியில் கடந்த வாரம் கடத்தப்பட்ட வான் வேலணை வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானதுஎனத் தெரியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இவ்வான் 80 மூடை அரிசியுடன் கடத்தப்பட்டது தெரிந்ததே

வவனியாவிலுள்ள அரிசி ஆலை ஒன்றிலிருந்து இந்த 80 மூடை அரிசியைக் கொழும்பு கொண்டுசெல்வதற்காக இந்த வான் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்ததாம். இவ்வானின் சாரதியும் கிளீனரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஊ]

## சுவிஸ் தொலைக்காட்சிக்குழு யாழ். நகர் வந்து சென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்நகருக்கு கடந்த வாரம் சுவிஸ் தொலைக்காட்சிக் குழுவொன்றுவிஜயம்! செய்திருந்தது எனத்தெரிவிக்கப்பட்டது

இலங்கையின் இனப்பிரச்னை குறித்து விரிவான ஆராய்வுகள் நடத்த இரண்டுபேரைக் கொண்ட இக்குழு கடந்த மாதம் இலங்கை வந்திருந்தது தெரிந்ததே

இவர்கள் கொழும்பில் பல அரசு அதிகாரிகளையும் அகதிகள் புனர் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் விரிவான சந்திப்புகளை நிகழ்த்திய பின்னரே யாழ்நகர் வந்ததாகத் தெரியவருகிறது.

இவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஹோட்டலொன்றுக்கு போராளி இயக்கமொன்றினுல் கூட்டிவரப்பட்டதாகவும் பின்னர் இன்னெரு இயக்கம் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இவர்களை அழைத்துச் சென்று காட்டியதாகவும் தெரியவருகிறது.

யாழ் நகரில் தங்கியிருந்த சமயம் இவர்கள் பலமுக்கிய பிரமுகர்களுடன் சந்திப்புகள் நடத்தியுள்ளனர். இவர்கள் தற்போது சுவிஸ் திரும்பியுள்ளனர்.

## ஆலமரத்தில் கட்டப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம்!

(மூதூர் நிருபர்)

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம், நிலாவெளி 10-ம் கட்டையிலுள்ள ஆலமரமொன்றுடன் கட்டிவைக்கப்பட்ட நிலையில் நேற்றுக்காலை காணப்பட்டது.

''கும்புறுப்பிட்டியைச் சேர்ந்த பரமேஸ்வரி] முத்துசாமி [28 வயது] என்பவர் காட்டிக்கொடுக்கும் சமூக விரோதசெயல்களில் ஈடுபட்டமைக்காக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் [புளட்] மரண தண்டனை வழங்கிய தாகக் குறிப்பிடும் கடதாசித்துண்டு ஒன்று இவரின் சடலத்துக் கருகாமையில் காணப்பட்டது.

மேலும் இவரது கணவர் கும்புறுப்பிட்டி இராணுவ முகாமில் சமையல் வேலை செய்பவர் என்றும் அக்கடதாசித் துண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## வடபகுதி வீதிகள், பாலங்கள் திருத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம். திங்கள்

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் உள்ள முக்கியமான பாலங்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

வடபகுதியில் உள்ள பிரதான பாதைகளைத் திருத்துவதற்கு 210 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. பல முக்கிய பாதைகளின் திருத்த வேலைகள் அனேகமாக முடிவடையும் நிலையிலுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு அபிவிருத்தி நிதியிலிருந்து 90 லட்சம் ரூபாவும், பெருந்தெருக்கள் திணைக்களத்திலிருந்து 120 லட்சம் ரூபாவும் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டன.

இம்மாதத்துள் 600 பீப்பாய் தார் வந்து சேருமெனவும் எதிர்பார்க்கப்படுவதால் மழை காலத்துக்கு முன்பாக பெரிய வீதிகளுக்கு 'தார்' இட்டு அவற்றைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அராலித்துறையின் விஸ்தரிப்புக்காக 100 அடி நீளமான பாலவேலைகள் மேற்கொள்ளப்பட விருக்கிறது. [ச]

## ஜனாதிபதியின் எல்லைக்கமிஷன் ஆலோசனை: இந்திய அதிகாரிகள் அதிருப்தி

புதுடில்லி, ஞாயிறு

மாகாண எல்லைகளை மீள் வரைவு செய்வதற்கும், பங்கீடு செய்வதற்குமான எல்லைச் கமிஷன் ஒன்றினை நியமிக்கும் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் ஆலோசனை குறித்து இந்திய மத்திய அரசு அதிகாரிகள் திருப்தி வெளியிடவில்லை என புதுடில்லியின் அரச வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இத்தகையதொரு கமிஷனை அமைத்து அது தனது மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்கான அறிக்கையினை 18 மாத இடைவெளிக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஆலோசனையை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்

ஆயினும் இந்தக்கமிஷனில் குறிப்பிடத்தக்களவு பயனேதும் விளையாது என சம்பந்தப்பட்ட இந்திய அதிகாரிகள் கருத்துக் கொண்டுள்ளனராம். இந்தியாவில் அமைக்கப்பட்ட ''மாநிலங்களின் மீளமைப்புக் கமிஷனைப்''ப் போன்று இதுவும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக பிரச்னைகளை புதிதாகத் தோற்றுவிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனரென இந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஊ]

## கால்நடை---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணக்கூட்டமொன்று நடைபெற விருக்கின்றது.

அன்றையதினம் அங்கு கால்நடை வளர்போர்வளர்க்க விரும்புவோர்களுக்கான கலந்துரையாடல் கூட்டமொன்றும் இடம்பெற விருக்கின்றது.

## மரண அறிவித்தல்

### செ. பாவிலுப்பிள்ளை

[அந்தியகால சேவையாளர்]

செ. பாவிலுப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் மரியம்மா [நேசம்] அவர்களின் அன்புக் கணவரும், நவரெட்ணம், லீலா, செல்வராசா, [வயிற்கவுஸ், உரிமையாளர்], இந்திராணி, தேவராசன், குலேந்திரன், ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பம், சுபாந்தினி, செல்வம் ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னரின் பூதவுடல் 15-09-86 இன்று திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ்ப்பாணம், இல: 80, பிரதான வீதியிலுள்ள அன்னரின் இல்லத்திலிருந்து யாழ். பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுததுச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C-4646)

### முத்துக்குமாரசாமி செட்டியார் ஞானம் செட்டியார்

முத்துக்குமாரசாமி செட்டியார் ஞானம் செட்டியார் 14-9-86 அன்று காலமானுர். இவர் ரத்தினம்மாவின் அன்புக் கணவரும், சண்முகானந்தனுடைய U. K ] தகப்பனுரும், காலஞ்சென்ற திருமதி பொன்னம்மா ஆறுமுகஞ்செட்டியார், காலஞ்சென்ற சண்முகநாதன் செட்டியார், காலஞ்சென்ற திருமதி வாலாம்பிகை T. N சுப்பையா (Procter), காலஞ்சென்ற வைத்திலிங்கம் செட்டியார், திருமதி உண்ணுமலை ராமசாமிப்பிள்ளை [சூரங்குடி], திருமதி சிவகாமசுந்தரி குருநாதபிள்ளை, திருமதி சிவயோகம் விநாயகமூர்த்தி [அளவெட்டி], திரு. யோகநாதன் செட்டியார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி நவராஜகுலம் முத்துக்குமாரசாமி Radio Ceylon], திருமதி லீனு சண்முகாந்தன் [U K ], திரு. ஆ. பாலசுப்பிரமணியம் செட்டியார், திரு. க கனகரெட்னராஜா (Valuation Dept. Colombo,] திரு. தி. கணேஸ்வரன் [M. S. Industries, கோண்டாவில்]. திரு ஞானரெட்ணம் (Colombo] ஆகியோரின் மாமனுரும், V. முத்துக்குமாரசாமி[Valuation Dept Colombo], V. ஆனந்தகுமார் திருமதி க மீனலோசனி திருமதி க விஜயலட்சுமி, திரு S வள்ளிநாயகம் [M.M. Abdul Cader and Bros., Jaffna], திரு V புவனேந்திரன் [சிங்கப்பூர், Engineer] அன்னரின் பெருமக்களும் சுரேஸ், நரேஸ் [U K ], குபரேஸ், செந்தூரன், ஸ்ரீநாகதர்ஸினி, ஸ்ரீநாகதுலசிகரன், அபர்ணு, கிருஸ்ணவேணி, சுகன்யா, தீபன், பிருந்தி, ஆறுமுகவடிவேல் இந்திரகுமார், தயாநிதி, கலாநிதி, விஜயக்குமார் ஆகியோரின் பேரனுமாவர். அன்னரின் ஈமைக்கிரியைகள் இன்று 15-9-86 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் 293, K.K S. ரோட், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(C 4647)

## ரூபவாஹினியில் மேற்கு குறித்தே கூடுதல்பிரசாரம் —ஆய்வில் தகவல்

கொழும்பு, ஞாயிறு.

இலங்கையின் தேசிய தொலைக்காட்சிச் சேவையான ரூபவாஹினியின் வெளிநாட்டுச் செய்தியில் பெரும்பான்மையாக மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் நடப்பவைபற்றியே காட்டப்படுகிறதாம்.

ரூபவாஹினியின் செய்திகள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வொன்றிலேயே இத்தகவல் வெளியானது.

வெளிநாட்டுச் செய்தியில் 53.1 சதவீதமானவை ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் நடப்பவைபற்றியே சித்தரிப்பவையாக உள்ளனவாம். அதேவேளை எமது பிராந்திய செய்திகள் 34.4 சதவீத இடத்தையே பிடிக்கின்றனவாம்.

சிங்களச் செய்தியில் உள்நாட்டுச் செய்திகளே அதிகளவில் இடம்பெற்றபோதும் ஆங்கிலச் செய்தியில் அதிகமாக வெளிநாட்டுச் செய்திகளே ஒளிபரப்பட்டதை இவ்வாய்வு தெளிவாக்கியுள்ளது.

உள்ளூர் செய்திகளில் ஒளிபரப்பப்படும் அரசியல் வாதிகளுடன் சம்பந்தப்பட்டவற்றில் நடத்தப்பட்ட ஆய்வின்படி ஜனாதிபதியுடன் தொடர்பான செய்திகளே அதிகளவில் ஒளிபரப்பப்படுகின்றதாம். பிரதம மந்திரியும், தேசிய பந்தோபஸ்து அமைச்சரும், நிதி அமைச்சரும் முறையே 2-ம், 3-ம், 4ம் இடங்களைப் பிடித்துள்ளனர். விளையாட்டுத்துறை, பாராளுமன்ற விவகார அமைச்சர் 20-ம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இவ்வருடம் மே 21-ம் திகதி முதல் ஜூன் 4-ம் திகதி வரை நடக்கப்பட்ட இவ் ஆய்வில் தமிழ்ச் செய்திகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை எனத் தெரிகிறது. [ஊ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126.